## கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் விதிமுறைகள்

**1.** பதவி பெயர் : கால்நடை பராமரிப்பு உதவியாளர்
காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை:–

| | |
|---|---|
| SCA | - |
| SC | 2 (Pririoty-1 Non Pririoty-1) |
| ST | - |
| MBC - Widow | 1 (Non Pririoty) |
| BC - General | 1 (Non Pririoty) |
| BCM - General | 1 Pririoty-1 |
| GT - Widow | 1 Non Pririoty-1 |
| GT General | 3 (Pririoty-1 Non Pririoty-2) |
| Total | 9 |

**2.** பதவி பெயர் : கால்நடை பராமரிப்பு உதவியாளர்
**ஊதிய விகிதம்** – Level 2 - Rs.15,900 - Rs.50,400/-
மொத்த காலியிடங்கள் எண்ணிகை : 9
தேவைப்படும் தகுதிகள் –

1. கல்வித்தகுதி – குறைந்த பட்ச கல்வித் தகுதி 10–ம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும். (appeared X standard)
2. சைக்கிள் ஒட்ட தெரிந்திருக்க வேண்டும்.
3. கால்நடைகளை கையாள தெரிந்திருக்க வேண்டும்.

**3.** வயது வரம்பு– குறைந்த பட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் வகுப்பினர்களுக்கு 35 ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) 32 ஆகும். பொதுப் பிரிவினருக்கு 30 ஆகும் (1.7.2015 அன்று உள்ளபடி)

**4.** ஏற்கெனவே பணிபுரிந்த அரசு துறை / அரசு அலுவலகத்திலிருந்து குற்றச் சாட்டுகளின் அடிப்படையில் பணிநீக்கம் (Dismissed from Service) செய்யப்பட்டிருப்பின் அம்மனுதாரர்களின் மனு நிராகரிக்கப்படும்.

**5.** குற்றவழக்குகள், நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் அரசியலில் பங்கேற்று அதற்கான தண்டனை பெற்றவர் மனு நிராகரிக்கப்படும்.

**6.** மனுவினில் அனைத்து விவரங்களும் விண்ணப்பதாரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**7.** விண்ணப்பத்துடன் சுயமுகவரியிட்டு, ரூபாய் 5/ க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய உறை (Envelope) இணைக்கப்படவேண்டும்.

**8.** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 28.02.2018 மாலை 5.45 மணிக்குள் பெறப்பட வேண்டும். 28.02,2018 பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
<u>விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி –</u>
மண்டல இணை இயக்குநர் அலுவலகம்,
கால்நடை பராமரிப்புத்துறை,
659/1 பழைய பெங்களூர் சாலை,
கால்நடை மருததுவமனை வளாகம்,
லண்டன்பேட்டை, கிருஷ்ணகிரி 635 001
அலுவலக தொலைப்பேசி எண் 04343 230018

| | |
|---|---|
| 9. | விண்ணப்பம் ஏற்கப்பட்ட மனுதாரர்களுக்கு நேர்முக தேர்வு மாவட்ட அளவில் நடைபெறும் . |
| 10. | நேர்முகத் தேர்வில் அதிக மதிப்பெண் (Merit) பெறும் விண்ணப்பதரார்களின் சான்றுகள் சரிபாக்கப்பட்டு இனசுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். |
| 11. | தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் மாவட்டத்தில் எங்கு வேண்டுமானாலும் பணியமர்த்தப்படுவார்கள் / பிறகு மாநிலத்தில் எங்கு வேண்டுமானாலும் மாறுதல் செய்யப்படுவார்கள். |
| 12. | தேர்வு தொடர்பான எதையும் அல்லது எல்லாவற்றையும் மாற்றியமைப்பதற்கோ அல்லது தேர்வினை இரத்து செய்வதற்கோ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. |
| 13. | முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் / சுயமுகவரியிட்டு, ரூபாய் 5/ க்கான அஞ்சல் வில்லை ஒட்டாத விண்ணப்பங்கள் / குறிப்பிட்ட தேதிக்கு பிறகு தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். |

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**கிருஷ்ணகிரி.**